**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,

<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2025ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 04 ஆம் நாள் சனிக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.13/2024 இன் அ.வ.எண்.40/2017</u>**

1. M. கோபால்சாமி
2. D.செந்தில்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. M/s. வாஞ்சியம்மன் பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் –க்காக அதன் Managing Partner K.V.வரதராஜ்
2. K.V.வரதராஜ்
3. R.M.செந்தில்வடிவேல்
4. N.கனகராஜ்
5. V.ஜெகதீஸ்வரி
6. V. சுஜாகர்
7. M. விமலா கணேஷ்
8. S. கிருஷ்ணவேணி
9. M. சின்னசாமி
10. S.துரைசாமி கவுண்டர்
11. D.சிவக்குமார்
12. A.நாகராஜன்
13. விஜயலட்சுமி
14. ஜெயலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 18.12.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ஸ்ரீவத்சன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**ஆணையுரை**

2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரியும் உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் புதிய சங்கதிகளைக் கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். எனவே அந்த சங்கதிகளை மறுப்பதற்கும் தங்கள் தரப்பு வாதங்களை கூறுவதற்கும் பதிலுரை தாக்கல் செய்வது அவசியமாக உள்ளது. எனவே இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை பிராதின் ஒரு அங்கமாக கருதக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 2 மற்றும் 12ம்** எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு 1, 5, 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையில் இம்மனுவானது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. எதிர்வழக்குரையானது 31.05.2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு தாவாவானது வழுக்கெழுவினாக்கள் புனைவதற்கு 16.07.2018ல் வாய்தா போடப்பட்டு 27.07.2018, 10.08.2018, 30.08.2018, 04.09.2018 மற்றும் 17.09.2018 க்கு வாய்தாக்கள் போடப்பட்டது. அதன்பிறகு பலவாய்தாக்கள் வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் 18.06.2024 அன்று இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 7 வருடங்கள் ஆன நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும் 10ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டநிலையில் அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்க்க எவ்வித

மனுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் 13, 14 எதிர்மனுதாரர்கள் இந்த மனுவில் சேர்க்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு உட்பட்டது அல்ல. மேலும் என்ன காரணத்திற்காக இந்த மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்களும் மேற்படி மனுவில் குறிப்பிடவில்லை. மேலும் 13, 14 எதிர்மனுதாரர்கள் இந்த மனுவின் அசல் வழக்கிற்கு எந்த விதத்தில் தேவையானவர்கள் என்பதைக் குறித்தும் மனுவில் குறிப்பிடாமல் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்கக்கூடியது அல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**6)** இருதரப்பும் பரிசீலிக்கப்பட்டதில், எதிர்வழக்குரை 31.05.2017ல் தாக்கல் செய்யப்பட்டு பல வாய்தாக்கள் வழக்கெழுவினாக்கள் புனைவதற்கும், விசாரணைக்காகவும் போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரருக்கு போதுமான அவகாசம் இருந்தபோதிலும் பதிலுரை தாக்கல் செய்யாமல் 7 வருடங்கள் கழித்து தற்போது இம்மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கம் ஆகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 10ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசுகளான 13 மற்றும் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பினராக சேர்ப்பது குறித்து அசல் தாவாவில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இந்த மனுவில் அவர்களது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான எந்த மனுவோ அல்லது உரையோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இவ்வளவு காலதாமதாக பதிலுரை தாக்கல் செய்யத் தேவையான காரணங்கள் எதுவும் மனுதாரரால் விளக்கப்படவில்லை.

**Ordinarily, a Replication is not to be filed nor permitted to be filed by Court. It can be filed in three situations.**

**(I) when required by law;**

**(ii) When a counter claim is raised or set off is pleaded by defendant**

**(iii) When the court directs or permits a replication being filed**

**It is observed that in certain cases with the leave of the Court, plaintiff has been permitted to file a rejoinder to the written statement filled by the defendant –** என்று உள்ள நிலையில் மேற்கூறிய எந்தவொரு காரணமும் இம்மனுவில் குறிப்பிடப்படவில்லை. எனவே இம்மனுவை ஏற்றுக்கொள்ள போதிய முகாந்திரம் இல்லை எனக் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/...........ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

ஒம்/...........ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.13/2024 இன் அ.வ.எண்.40/2017

நாள் : 04.01.2025

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---